| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.18/2022 | வா. சா 1. | தேதி.14.03.2023 | |
| செல்வி. கிருத்திகா | | வயது | 30 |
| த/பெ. திரு.சதாசிவம் | | முகவரி | 32/11/ 20 நாகம்மா கோவில் அருகில், மேட்டுப்பாளையம் |
| மேட்டுப்பாளையம் | | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

9. எனது அப்பாவின் கையெழுத்துள்ள ஆவணங்களை வீட்டில் தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. அவையெல்லாம் என் பெரிய ப்பாவிடம்தான் உள்ளது. என் அப்பாவிற்கு பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ் உள்ளதென்றால் சரிதான். மேற்கண்ட ஆவணங்களை அவருடைய கையெழுத்தை நிருபிக்க தாக்கல் செய்ய முடியும் என்றும் அவற்றை தாக்கல் செய்தால் வா சா ஆ 8 ல் உள்ள கையெழுத்து அவருடையதுதான் என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் நான் தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பாவின் ஆவணங்கள் என் பெரிய ப்பாவிடம் உள்ளதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. வழக்குச் சொத்தில் என் அத்தை தொட்டம்மாள் உள்பட நாங்கள் யாரும் கூட்டு சுவாதீனத்தில் இல்லையென்றும் வழக்கிற்காக கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா சா ஆ 8 ல் மற்றொரு சாட்சி கையெழுத்து போட்டுள்ளது எனது மற்றொரு அத்தை ருக்மணியின் மகன் செந்தில்குமார் என்றால் அது எனக்கு தெரியாது. வா சா ஆ 8 ஆவணம் எங்களுக்கும் எங்கள் குடும்பத்தாருக்கும் தெரிந்து வெளிப்படையாக எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதனால்தான் 2001 ல் எழுதப்பட்டிருந்தும் இவ்வளவு நாட்களாக எந்த வழக்கும் போடாமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே அந்த சொத்து கோவிந்த கவுடரின் சொத்தாக இருந்திருந்தால் அவர் இறந்த உடனேயே இந்த வழக்கை தாக்கல் செய்திருப்போம் என்றும் அவரது சொத்து இல்லையென்பதால்தான் அவர் இறந்த உடன் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால சரியல்ல.

11. அப்பொழுது எங்களுக்கு தேவை எழவில்லை. வழக்குச் சொத்தில் ஒருவர்

வாடகைக்கு உள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள்தான் இருக்கிறோம். 3ம்பிரதிவாதி வெங்கடாசலத்தின் பொருப்பில் அந்த சொத்து சதாசிவம் என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது எனக்கு நன்கு தெரியும் என்றும் அவ்வாறு தெரிந்திருந்தும் வழக்கிற்காக வாடைக்கு இல்லையென உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் எங்களுக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா வி ஜி எம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ செலவு ரசீது இதுதானா என்றால் ஆமாம். அந்த மருததுவ செலவு ரசீது பி சா ஆ. 2. எனது பெரியப்பாதான் அந்த மருத்துவ செலவை செய்ததால் தான் அதற்கான ரசீது அவரிடம் உள்ளது என்றால் சரியல்ல. நான் 1ம்வாதி கனகராசின் தூண்டுதலின்பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் எனக்கு எவ்வித பாக பாத்தியமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒப்பம்/- பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.